ஈழமுரசு®
MAISON DES MEDIAS
முரசு 02 | 11 - 17 Septembre 2010 | முழக்கம் 54

“ஒரு பலம் வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு, எமது மக்களின் விடிவுக்காக உலகத் தமிழினம் உரிமைக்குரல் எழுப்பவேண்டும். ”



தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# சர்வாதிகார நாடாக சிறீலங்கா மாறியது!

ம (10.09.20.10, வெள்ளிக்கிழமை) க்களினதும் எதிர்க் கட்சியினரதும் பெரும் எதிர்ப்புகளுக்கும், சர்ச்சைகளுக்கும் மத்தியில் சிறீலங்கா அரசமைப்பின் 18 வது திருத்தச் சட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் 161 வாக்குகளைப் பெற்று நிறைவேறியுள்ளது. எதிராக 17 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன. முன்னதாக இந்த அரசியல் சட்ட திருத்தத்துக்கு ஆதரவாக சிறீலங்கா உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியது. இந்த சட்ட திருத்தத்தை மக்களின் வாக்கெடுப்பிற்கு விடாமல், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதும் என்று கூறியது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 18வது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்களான அப்துல் காதர், லக்ஷ்மன் செனவிரத்ன, நில்வல ஜயசிங்க, ஏர்ள் குணசேகர, மனுஷ நாணயக்கார, நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான உமெக்ஷா சுவர்ணமாலி ஆகியோர் சபைக்கு வருகை தந்து 18வது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து மகிந்தவிற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 18வது திருத்தத்தை எதிர்த்து வந்தபோதும் அக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எச்.ஏ.பியசேன அரசுக்கு ஆதரவு தெரிவித்து அரச தரப்புக்குத் தாவியதுடன் 18வது திருத்தச் சட்டத்தை ஆதரித்தும் வாக்களித்தார். சபைக்கு சமுகமளித்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் 10 பேரும் எதிராக வாக்களித்தனர். ஜே.வி.பி. உள்ளடக்கலான ஜனநாயக தேசிய முன்னணி உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டுத் தெரிவான சிறீலங்கா முஸ்லிம் கொங்கிரஸ் உறுப்பினர்கள் மகிந்த அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுப்பதாகத் தெரிவித்து 18வது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஏற்கனவே அரசு பக்கம் சென்றிருந்த திகாம்பரம், பிரபா கணேசன் ஆகியோரும் 18வது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். அரசின் பக்கமிருக்கும் இடதுசாரிக் கட்சி உறுப்பினர்களும், இலங்கை தொழிலாளர் கொங்கிரஸ் உறுப்பினர்களும் 18வது திருத்தச் சட்டத்துக்கு

தொடர்ச்சி 04ம் பக்கம்...

# 13வது நாளில் நடைபயணம்

# ஸ்தாஸ்பேர்க் ஐரோப்பிய நாடாளுமன்றில் மனு கையளிப்பு



பிரசெல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்தை நோக்கி தமிழ் மக்களிற்கு நீதி கேட்டு மனிதநேய நடை பயணம் மேற்கொண்டுள்ள திரு.ஜெகன் (62) அவுஸ்திரேலியா, திருமதி தேவகிகுமார் (36) சுவிஸ், திரு.வினோத் (48) பிரான்ஸ் ஆகிய மூன்று ஈழ உணர்வாளர்கள் இன்று (10.09.2010) 13வது நாளில் தமது நடை பயணத்தைத் தொடர்ந்து வருகின்றனர். சீரற்ற காலநிலையிலும் மனவுறுதியுடன் தொடர்ந்து தமது மனிதநேய நடைபயணத்தை மேற்கொண்டு இதுவரை 307 கிலோ மீற்றர்கள் வரையான தூரத்தை அடைந்துள்ளனர்.

தொடர்ச்சி 09ம் பக்கம்...

இணையத்தளத்தில் ஈழமுரசு www.eelamurazu.com



R.S.T MULTISERVICES
ஆர்.எஸ்.ரி பல்சேவை நிறுவனம்
வீடு விற்பதற்கு
வாங்குவதற்கு
100 % தொடக்கம் 110 % வரை வீட்டுக்கடன்
SERVICE FINANCIERE
உங்கள் சகல கடன்களையும் ஒருங்கிணைக்க எம்மை நாடுங்கள்.
● வீட்டுக்கு தேவையான வங்கிக் கடன்
● தனிப்பட்ட கடன் (Crédit Personnel)
RACHAT DE PRET
ஆகியவற்றுக்கு நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்
8 Bis, Rue de Verdun - 94190 Villeneuve Saint Georges
திரு- 01 45 99 22 76 தொ. நகல். 01 45 99 43 17
Email : Contact@avendreimmo.com
Website : http: //www.avendreimmo.com